**எழுத்து தளத்தில் என் நண்பரகள் என்னை பற்றி, கவிதைகளை பற்றி அவ்வப்போது வாழ்த்தி சொன்ன கருத்துக்களில் சில உங்கள் பார்வைக்கு தற்பெருமைக்காக அல்ல ... தகவலுக்காக மட்டுமே ...**

**வாழ்த்திய உள்ளங்களை உள்ளத்தில் வைத்திருப்பதை சொல்வதற்காகவும் ...**

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

உண்மையில் பிரமிக்க தக்க விடயம் தான். 500 கவிதைகள் என்பது சாதாரண விடயம் அல்ல. தங்களின் அர்ப்பணிப்பும் ஆர்வமும், தமிழ் மொழி மேல் வைத்துள்ள அயராத பற்றும்தான் இந்த வெற்றிக்கு காரணமாக இருக்க முடியும். இன்னும் நிறைய படிகளை சுவாரஸ்யமாக, சுகமாக, இனிமையாக கடந்திட எமது வாழ்த்துகள் பழனி குமார்.

## ---- மகேஸ்வரி பெரியசாமி , மலேசியா

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஆயிரம்படி தாண்டினால்
"பழனி: முருகன்
ஐநூறு கவிகளை தாண்டினார்
ஐயா பழனி " கவிஞன்"

குன்றின் மீது
நிற்கிறார் "சிந்தனை சிற்பி"
நற் குணத்தால்
தமிழ் பேசும் அமுத சுரபி

அண்ணாந்து பார்க்கிறேன்
இரு கை தூக்கி வணங்குகிறேன்.
எழுத்தாளனாய் வாழ்த்துக்கிறேன்

சிறுவனாய் ஆசி கேட்கிறேன் .

சிந்தனை சிற்பி க்கு வணக்கம் !!
சிற்பியும் நீங்களே ! சிலையும் நீங்களே.. !!

இன்னும் நிறைய படைப்பு சிற்பங்கள் வேண்டும் ஐயா

## --- சந்தோஷ் குமார்

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

எழுத்தும் பதிவும்
எத்தனை என்றாலும்
என்னவரின் எழுத்துக்கள்
எகிறிடுதே தூரம்..!
எழுத்து தளத்தில்
எண்ணத்தை எட்டிடு..!
எண்ணத்தை கொட்டிடு..!
எஞ்சிய திங்களுக்குள்..!
என் போன்றோர் உன் பக்கம்..!
எழுதிடுவாய் பல பக்கம்..!

வாழ்த்துக்கள்..!
"பழமுதிர்கவி" பழனியாரே..!

கையில் உளியோடு..
கவியில் ஒளியோடு..!
சமுதாய விழிப்போடு..
தமிழில் களிப்போடு..
என்றும் திகைப்போடு
சிந்தனை உவப்போடு
சிற்பியே நீ சிலை போடு..!

நாளும் விடிந்திடும் விடியல்..
நல்லதுபோல் விடியட்டும்..!
நலம், உடல் பலம் கண்டு
நல்ல கவிதை நாளும் பதித்து
சீர்கெட்ட சமுதாயம் சிந்தித்து
சீர் பெறவே சீர் "பா" வடித்து
சிறப்பாக வாழவேண்டும்..!

'பிரம்மச்சாரி'யில்லை நீர்
'பிரம்பு'ச்சாரியாய் நீர்..! ஆம்
பல படைப்புகளில் அடிகள்
படித்தபோது வலிக்கிறது ..!
படிக்க தொடங்கும் முன்னே
பதை பதைக்கும் மனசு..!

நீர் நாத்திகரோ..ஆத்திகரோ..
நான் உமக்கு பக்தனானேன்..!
கவிதைக்கு கருத்தாய் 'ஒளி'
தீபம் ஏற்றுகிறேன்..! உம்
தீ எரிகின்ற கவிதை தீபம்
தீராமல் எரிவதற்காய்..!

திகட்டாத கவிதை தரும்
அய்யா "பழனிகுமார்" கவிமுரசே
அய்ந்தாறு அகவை தொடங்கும் காலை..!
அகம்மகிழ அணிகின்றேன்.. உம்
அழகுமுகம் பார்த்து முதல் மாலை..!
12.10.2013
பிறந்த நாள் வாழ்த்துக்களுடன்
உங்கள் பையன்
குமரி.

# குமரி, சவூதி அரேபியா

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஐநூறு கவி படைத்து , பத்தாம் பதிப்பை எட்டிய பழனி குமார் அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள் ! தங்கள் இலக்கை
இலகுவாய் எட்ட வாழ்த்துக்கள் !

ஒப்புக்கொள்கிறோம் ....
தன்னைத் தானே செதுக்கும்
சிற்பியும் நீரே ..! சிலையும் நீரே ....!!

# --- ஷ்யாமளா ராஜசேகர்

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

அழகிய தமிழில் ஐநூறு!
மென்மேலும் அமுதஐநூறு பலபிறக்க,
அன்பான உள்ளங்கள் வாழ்த்துகிறோம்..

# ---- சேது சபா , சீர்காழி

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஆம் ...
சிந்தனை சிற்பியும்
சீரோங்கும் தமிழ் வடித்த
சிலையும் நீரே !

# ---- அஹமது அலி

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

சிற்பி செதுக்கும் சிலைவடிவ கவிகள் நித்தமும் சிந்திக்கவும் ,சிறக்கவும் வைக்கும் ...என் போன்ற படைக்க கற்கும் கவிக்குழந்தைகளுக்கு ....

## ---- சரண்யா

---

நல்ல கவிதை
சிறப்பான வடிவம்
வலிமையான் சொற்கள்
உயரிய எண்ணம்
அதித திறமை
உயர்வு பெற வாழ்த்துக்கள்.

## ---- மீனா சோமசுந்தரம்

---

சீறாய் செதுக்கி
சிறப்பாய் தந்தீர்
தமிழை சிலையாய் வடித்து
கவி மழையாய் ஆனீர்....

தமிழ் பித்தனே
சமூக சித்தனே
தொடரட்டும்
உங்கள் கவி பயணம்
முடிவில்லாமல்....

இந்த கவிதை வள்ளுவனின் சிலை அருகே பதிக்க பட வேண்டிய ஒன்று... அருமை

எனக்கு குமரி பற்றி தெரியாது... குமரி பையன் பற்றிதான் ஓரளவு தெரியும். இன்று உங்களால் குமரியின் அழகை ரசித்தேன். வாழ்த்துக்கள் தொடரட்டும் உங்கள் பயணம்...............

அருமை உயிர் தோழமையே...

நான் முன்பே சொன்னதுபோல் சமூக மாற்றத்திற்கு உங்கள் கவிதைகள் விதை...!

நீங்கள் தமிழ் பித்தனல்ல
சமூக அக்கறை கொண்ட பித்தன்... சரி தானே...?

உங்கள் பிரொபைலில் விரைவில் எழுத்து குழுமம் அந்த பட்டத்தை வழங்குவார்கள் பாருங்களேன்... வாழ்த்துக்கள் மீண்டும்...!

## ---- முகமத் கவுஸ்

-----------------------------------------------------------------------------------------------------------------------------

உண்மையை உரைத்தாய் !
தளத்தோடு இணைத்து நட்பை
நெஞ்சகம் நிறுத்தியது அருமை ! பெருமை ! நன்று .

## --- முகம்மத் பாரூக்

-----------------------------------------------------------------------------------------------------------------------------

பெருமையாக இருக்கிறது தோழரே .நல்ல கருத்து.நல்ல சிந்தனை .சமுதாய செம்மலே நிறைய சாதியுங்கள் !உங்களுடன் நாங்கள் இருக்கிறோம்.,முடிந்தவரை முயற்சிப்போம் முட்டாள் மனிதர்களை மாற்ற.வாழ்த்துக்கள் தோழா .நல்ல கவிதை படித்த திருப்தி

## --- யாத்விகா கோமு

-----------------------------------------------------------------------------------------------------------------------------

சமூக அறிவுரைக் கவிஞர் என்ற பட்டம் தரலாம் உங்களுக்கு. சமூகத்திற்கு அறிவு கொளுத்தும் உங்கள் கவிதைகள் மிகவும் அருமை. இனிமையான சொல்லாடல்களும் ஆங்காங்கே இடித்துரைக்கும் அறிவுரைகளும் சிறப்பானவை. இத்தகைய உங்கள் கவிதைகளை தொகுத்து "ஓஹோ ஹோகோ மனிதர்களே " என்று கவிதைப் புத்தகமாக வெளியிடலாம். சமூகம் பயன் பெறும்.

வாழ்த்துக்கள் பழனிக் குமார்

## --- கல்பனா பாரதி

-----------------------------------------------------------------------------------------------------------------------------

மரத்தைப் பற்றி எழுதினாலும் மனிதனைப் பற்றி எழுதினாலும் சமூக அக்கறையுடன் எழுதும் உங்கள் உயரிய கண்ணோட்டத்தை மனமுவந்து பாராட்டுகிறேன். இங்கு பதியப்படும் கவிதையிலிருந்து சொல்லிலும் கருத்திலும் சந்தங்களிலும்

சுவையிலும் தனிப் பட்டு நிற்கிறது . விழித்துப் பார்க்கும் முறுக்கு மீசை பாரதிகள் கவிதைக்குத் தேவை .
வாழ்த்துக்கள் பழனிக் குமார்

## ----நட்புடன், கல்பனா பாரதி

---

செம்மையான எளிமையான கவித்துவமான அறிவுரை நண்பரே....
வாழ்த்துக்கள்....

தொடர்ந்து எழுத்துங்கள்...

## --- க ஷர்மா, இலங்கை

---

சமூக சிந்தனையுள்ள படைப்புகள் கொடுப்பதன் மூலம் சமுதாயத்தின் மீதும் மக்களின்மீதும் உங்களுக்குள்ள அக்கரையை வெளிப்படுத்துவதை நன்கு உணரமுடிகிறது.

## --- ரத்தினமூர்த்தி, திருப்பூர்

---

கருத்தான விழிப்புணர்வுப் பாடலும், அதற்குக் காரணமான அருமையான அன்றாடக் காட்சியும் நன்று.

## --- டாக்டர் வி கே கன்னியப்பன், மதுரை

---

உண்மையிலேயே அருமையான காட்சிதான்....மை போன்ற கருநீலக் கடலும்,அதை உள்வாங்கி வடித்தெடுத்த வரிகளும் ரசிக்க வைக்கிறது.

- ## தமிழின் தோழி , இலங்கை

---

நல்ல கவிதை!
நெய்தலும் பாலையும்
நிரவிக் கிடக்குது!

நிரம்பிய மணலிலே
உறவைக் காட்டுது!

## --- காளியப்பன் எசக்கியல்

---

அப்படியே கபகபகபன்னு எழுதி தள்றீங்களே சார், எப்படி சார்?, சிறப்பான கவிதை, வாழ்த்துக்கள்.

ஒவ்வொரு கவிதையிலும் சமூக அவலங்களை சாடுகிறீர்கள். படிக்கும் பல மனிதர்களுள் ஒருவர் மனம் மாறினாலும், கவிதைக்கு பெருவெற்றியே.
வாழ்த்துக்கள் சார்.

## --- ஈஸ்வரன் ராஜாமணி , சிங்கபூர்

---

எண்ணத்தில் உதிப்பதை எழுத்தில் வடிப்பதை
கிண்ணத்து தேனாய் அருந்தக் கொடுத்திடும்
வண்ணத்துப் பூச்சியாய் வண்ணங்களை சிந்திடும் திரு
பழனிகுமார் மின்னட்டும் தொடர்ந்து உங்கள் படைப்புகள் .வாழ்த்துக்கள்

## --- நடராஜ் , இலங்கை

---

சுதியும் லயமுமே இசையென இதுவரை புரிந்திருந்தேன்...
சுகமான ரசனை கலந்தால்தான் இதமான இசை என்று இப்போது புரிந்து கொண்டேன் - உங்கள் ரசனை அழகு...!

- ## ஹரிஹர நாராயணன்

---

அருமை பழனி சார்

என்ன கடைசி வரியில் கொஞ்சம் வருத்தத்துடன் நக்கலடிக்க வைத்துவிட்டீர்கள்....

==மணம் வீச வாழனும் அவனும் !

இப்ப மட்டும் என்னவாம்? மணம் வீசத் தானே வாழ்கிறான்...துர்மணம் !
(சும்மா குசும்பு...கண்டுக்காதிங்க)

தங்களின் சமுதாய சிந்தனை அடியேன் அறிவேன்.

நாற்றம் வீசும்
வாழ்கையிலே
மாற்றம் பேசுமா ?

நல்ல படைப்பு சார் !

■ கே எஸ் கலை

---

அழகான படங்களைத் தேர்ந்தெடுத்து அர்த்தமுள்ள
கவின் கவிதைகளை எழுதுவதில் வல்லவர் நீங்கள்
எண்ணத்தை உண்மையிலேயே ஓவியமாக்குபவர் நீங்கள்தான்.
என்னத்தை எழுதுகிறான் / றாள் என்று எத்தனையோ
கவிதகளைப் பற்றி வேதனையோடு நினைக்கின்ற வேளையில்
எண்ணத்தை சித்திரமாக்கி இயற்கையை எழிலைப் போற்றும்
உங்கள் கற்பனை வளத்தைப் போற்றுகிறேன் . கருத்தினும்
சால நல் மதிப்பெண்ணும் உளதோ ? எண்ணும் எழுத்தும்
கண்ணெனத் தகும் என்றனர் மூத்தோர் . எண்ணும் அருமையே .

---- அன்புடன்,கவின் சாரலன் ( சங்கரன் ஐயா )

---

இயற்கையோடு வாழ்ந்தால் இதயம் சிறக்கும்
இதயத்துடன் வாழ்ந்தால் நல்எண்ணங்கள் பிறக்கும்
இயற்கையை மிஞ்சிய செயற்கை இன்னும் பிறக்கவில்லை
இயற்கையின் அதிசயத்திற்கு உலகில் ஏதும் இணையில்லை

இயற்கையாக என்னை கவர்ந்தது கவிதை
செயற்கை செயற்கையாக பார்க்க சொன்னது கவிதை
இயற்கையான இதயத்தில் உண்மையான உன்னத கவிதை
இயற்க்கையின் இயல்பை உவமையாக கொண்ட நல்கவிதை

வாழ்த்துக்கள் ... வாழ்த்துக்கள் ... வாழ்த்துக்கள்
அருமை ... ஆனந்தம் ... அற்புதம்
பழனி அய்யாவின் பண்பான கவிதை
பழனி அய்யாவின் இயல்பான கவிதை

பழனி அய்யாவின் இதயம் பேசிய கவிதை
பழனி அய்யா நம்இதயத்தோடு இயற்கை இணைத்தகவிதை
நன்று ... நல்ல வரிகள் ... நல்ல படைப்பு

என்றென்றும் விவேகமுடன்

## -- கவி கண்மணி

-----------------------------------------------------------------------------------------------------------------------------

இதயம் நிறைந்தாலே இன்னல்கள் நீங்கிடும் !!!

கவிதை அருமை !!!

## --- உமா மகேஸ்வரி கண்ணன்

-----------------------------------------------------------------------------------------------------------------------------